www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

Reg.No

KA

## பன்னிரெண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 45

I. பலவுள் தெரிக: 7 x 1 = 7

அ) செய்யுள், உரைநடை:

1. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
2. 'மையல் வேழம் மடங்கலின் எதிர்தர உய்வு இடம் அறியேம் ஆகி' - என்னும் பாடலில் அமைந்துள்ள மெய்பாடு
   அ) அழுகை ஆ) இளிவரல் இ) அச்சம் ஈ) வெகுளி
3. 'காட்டல்' - என்பதன் இலக்கணக்குறிப்பு
   அ) தொழிற்பெயர் ஆ) பெயரெச்சம் இ) உருவகம் ஈ) பண்புப்பெயர்

ஆ) இலக்கணம், மொழிப்பயிற்சி:

4. பின்வருவனவற்றுள் காப்பியத்தைக் குறிக்காதது
   அ) கதைச் செய்யுள் ஆ) காப்பியச் செய்யுள்
   இ) அகலக்கவி ஈ) மகா காவியம்
5. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க:
   அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்
   ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
   இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
   ஈ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது
6. 'விட்டகுறை' என்ற நூலை எழுதியவர்
   அ) ஜெயமோகன் ஆ) எஸ்.இராமகிருஷ்ணன் இ) அழகிரிசாமி ஈ) புதுமைப்பித்தன்
7. Sound Effect என்பதன் மொழியாக்கச் சொல்லைத் தேர்க:
   அ) இயங்கு படம் ஆ) செய்திப் படம் இ) ஒளிப்பதிவு ஈ) ஒலி விளைவு

II. அ) குறுவினா: (செய்யுள்) - எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி: 2 x 2 =

8. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
9. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?
10. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

ஆ) குறுவினா: (உரைநடை) - எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி: 1 x 2 =

11. கலைப் படங்கள் என்பதை விவரி.
12. 'பருவத்தே பயிர் செய்' - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

இ) இலக்கணம், மொழிப்பயிற்சி - எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக 3 x 2

13. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.
14. தொன்மம் - விளக்கம் தருக.
15. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க: ளாண் - ளான்
16. செவியறிவுறூஉ - விளக்கம் தருக.

III. அ) சிறுவினா (செய்யுள்) - ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக: 1 x 4

17. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

18. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
19. மண்ணுளிப் பாம்பு போல் வாழும் நிலையில் உள்ளவர்கள் படும் துயரங்கள் யாவை?

ஆ) சிறுவினா (செய்யுள்) - ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக: 1 x 4 = 4

20. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
21. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

இ) மொழித்திறன் பயிற்சி - எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2 x 4 = 8

22. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கி கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்டார் கள்உண் பவர்
23. தமிழாக்கம் தருக:

Popular as the 'Cultural capital' of India, Tamilnadu is extremly well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.

24. பின்வரும் பத்தியைப் படித்து, தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக:

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக்கேட்டார்

IV. அ) நெடுவினா: (ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக) 1 x 6 = 6

25. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.
26. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

ஆ) மனப்பாடப் பகுதி: 1 x 4 = 4

27. 'காய்நெல் அறுத்து' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593